பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

25 09 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹானின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு மே மாதம் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.
- தமிழகத்தில் விரைவில் 3 ஆயிரத்து 277 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- மாணவர்கள் புத்தக அறிவு மட்டுமின்றி தொழில்நுட்ப அறிவு, சமூக உணர்வு, பண்பாடு மற்றும் ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் வலியுறுத்தியுள்ளார்.
- ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹானின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு மே மாதம் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ராணுவ விவகாரத்துறை செயலாளராகவும் அவர் செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் தேதி முதல் ஜெனரல் அனில் சௌஹான், முப்படைத் தளபதியாக பணியாற்றி வருகிறார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மேல்முறையீட்டு தீர்ப்பாயம், வரி செலுத்துவோருக்கு நீதியின் உண்மையான அடையாளமாகவும், வர்த்தகத்திற்கான நம்பிக்கை தூணாகவும், நாட்டின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு காரணியாகவும் அமையும் என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

மாணவர்கள் புத்தக அறிவு மட்டுமின்றி தொழில்நுட்ப அறிவு, சமூக உணர்வு, பண்பாடு மற்றும் ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் வலியுறுத்தியுள்ளார்.

வட சென்னையில் உள்ள பாரதி மகளிர் கல்லூரியில் நிறுவன மேலாண்மைக் குழுவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், உலகம் விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில் நமது மாணவர்களும் உலகளாவிய போட்டியில் முன்னிலை வகிக்க வேண்டும் என்பதே கல்வி நிறுவனங்களின் முதன்மை நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

இவற்றைக் கருத்தில் கொண்டுதான் கல்லூரி அருகே உள்ள தொழில்துறை சார்ந்தோர் மற்றும் மாணவர்களின் பெற்றோர் ஆகியோரை உள்ளடக்கிய நிறுவன மேலாண்மைக் குழு அனைத்துக் கல்லூரிகளிலும் அமைக்கப்பட்டு வருவதாக திரு. கோவி. செழியன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் விரைவில் 3 ஆயிரத்து 277 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட உள்ளதாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் ஆய்குடியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுடன் ஆலோசனை மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக அரசின் எரிசக்தி துறை முதன்மை செயலாளர் பீலா வெங்கடேசன் உடல் நலக் குறைவு காரணமாக காலமானார். அவருக்கு வயது 56.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, இரக்கம் நிறைந்த தலைமைத்துவம் மூலமும், கூர்மையான நிர்வாக திறமையின் மூலமும் சுகாதாரத்துறை செயலாளராக அவர் ஆற்றிய சேவைகள் எண்ணற்ற மக்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், கோவிட் பெருந்தொற்று காலத்தில் சவால் மிகுந்த மருத்துவத்துறை செயலாளராக பீலா வெங்கடேசன் பணியாற்றினார் என்று கூறியுள்ளார்.

பெரும் பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்த அவரது அகால மரணம் மிகுந்த வருத்தமளிப்பதாகவும், அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை உள்ளிட்டோரும் பீலா வெங்கடேசன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இனி மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்புத் தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தி குறித்த திட்டங்கள்.

(சவுண்ட் பைட் - 141 செகண்ட்ஸ்)

*(பாதுகாப்புத் தளவாடங்களின் உற்பத்தியில் சுயசார்பினை எட்ட வேண்டும் என்பதை இலக்காக கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.*

*ஆபரேஷன் சிந்தூரின் போது உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் வலிமையை உலகம் அறிந்து கொண்டது. சுயசார்பு இந்தியாவின் முக்கியத்துவத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.*

*(சவுண்ட் பைட் – மோடி தமிழ் - செகண்ட்ஸ்)*

*மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் இதுவரை இல்லாத அளவுக்கு கடந்த நிதியாண்டில் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி 1 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியது. இது கடந்த 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 மடங்கு அதிகமாகும். தனியார் பங்களிப்புடன் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வந்ததற்கு மத்திய அரசு பின்பற்றிய கொள்கைகளே காரணமாகும்.*

*உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தளவாடங்களுக்கு முன்னுரிமை, தொழில் புரிய உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தியது போன்றவையும் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி அதிகரித்ததற்கு காரணமாக இருந்தன.*

*உற்பத்திக்கான இந்தியா இயக்கமும் இதற்கு முக்கிய பங்கு வகித்தது. ஆபரேஷன் சிந்தூரின் போது இது உலகிற்கு உணர்த்தப்பட்டது.*

*பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் சுயசார்பினை எட்டுவதற்கான கொள்கைகளை வகுத்ததன் மூலம் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்ததோடு, ஏற்றுமதியும் உயர்ந்தது. இதன்காரணமாக, பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தியில் சர்வதேச அளவில் இந்தியா முக்கிய பங்கு வகித்து வருகிறது என்றால் அது மிகையல்ல.*

*<u>இருவரிச் செய்திகள்</u>*

அமெரிக்காவின் ஒருதலைபட்ச வர்த்தக நடைமுறைகளும், பொருளாதார நிபந்தனைகளும் பல்வேறு நாடுகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியது என்று தென்னாப்பிரிக்க அதிபர் திரு. சிரில் ரமபோசா குற்றம் சாட்டியுள்ளார்.

**<<<<>>>>**

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 13 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

**<<<<>>>>**

லடாக்கின் சிறந்த எதிர்காலம் மற்றும் அமைதிக்காக செயலாற்றுமாறு அந்த யூனியன்பிரதேச மக்கள் மற்றும் மத அமைப்பினரை துணைநிலை ஆளுநர் திரு. கவீந்தர் குப்தா வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பீஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையின் முதல் பகுதியை காங்கிரஸ் மற்றும் ராஷ்டிரிய ஜனதாதள கட்சிக் கூட்டணி கூட்டாக வெளியிட்டுள்ளன.

<<<<>>>>

அசாமில் காஸிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் சரணாலயம் நாளை முதல் மீண்டும் செயல்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தின் தமிழ்நாடு புதுச்சேரி பிரிவின் சார்பியல் கொடைக்கானலில் உள்ள தூண் பாறையில் தூய்மை குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

<<<<>>>>

நெல்லை மாவட்டம் வீரவநல்லூரில் ஆயிரத்து 246 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு வழங்கினார்.

<<<<>>>>

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் கடத்தப்பட்ட 4 வயது சிறுவனை 2 மணி நேரத்திற்குள் ஆம்பூர் அருகே காவல்துறையினர் மீட்டனர்.

<<<<>>>>

ரயிலில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 27 லட்சம் ரூபாய் மதிப்பிலான 18 கிலோ வெள்ளிக் கட்டிகளை ஈரோடு ரயில்வே பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

ஆயுதபூஜை, தீபாவளி பண்டிகை விடுமுறையை ஒட்டி கூடுதல் பேருந்துகளை இயக்குவது மற்றும் பயணிகளுக்கான வசதிகள் குறித்து தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான சூப்பர்-4 சுற்றுப் போட்டியில் இந்தியா 41 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் பேட்செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 168 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக தொடக்க வீரர் அபிஷேக் சர்மா 37 பந்துகளில் 75 ரன் எடுத்தார்.

169 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களறமிறங்கிய பங்களாதேஷ், 19 புள்ளி 3 ஓவரில் 127 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெற உள்ள பங்களாதேஷ்-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.